# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

## அசல் வழக்கு எண். 7/2020

வாதிகள் தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. B. ரம்யா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர் மீனாட்சியம்மாள் வா.சா.3 | சாதி |
| த/பெ. | மதம் |
| கிராமம் | தொழில் |
| தாலுகா | வயது |

---

முதல் விசாரணை **12-02-2024.**

நான் இந்த வழக்கின் 1ம் வாதி. வாதிகள் தரப்பு 1வது சாட்சி. என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. நிரூபண பத்திரத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். படித்து காட்ட விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கைகேரகை வைத்தேன். பிராது வரைபடம் **வா.சா.ஆ.-1** ஆகும். பொன்னாள் என்ற அழகம்மாள், சந்திரபாண்டியன் ஆகியோர் எனக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.-2** ஆகும். 18-06-1962ம் தேதியில் ஆறுமுக மூப்பருக்கு முத்துக்காளை மூப்பர் வகையறா எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் அசல் **வா.சா.ஆ.-3** ஆகும். 23-06-1986ம் தேதியில் 2ம்வாதி சின்னஅழகனுக்கு சக்கம்மாள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் அசல் **வா.சா.ஆ.-4** ஆகும். 15-06-1990ம் தேதியில் நத்தம் நிலவரி திட்ட தனி வட்டாட்சியரால் பட்டா எண். 71 சம்மந்தமாக எனக்கு வழங்கப்பட்ட விசாரணை அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.-5** ஆகும். 15-06-1990ம் தேதியில் நத்தம் நிலவரி திட்ட தனி வட்டாட்சியரால் பட்டா எண். 228 சம்மந்தமாக 2ம் வாதி அழகனுக்கு வழங்கப்பட்ட விசாரணை அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.-6** ஆகும். 24-08-2017ம் தேதியில் அருப்புக்கோட்டை மண்டல துணை வட்டாட்சியர் எனது பெயருக்கு வழங்கிய பட்டா மாறுதல் உத்தரவு

அசல் **வா.சா.ஆ.-7** ஆகும். 03-09-2019ம் தேதியில் எனது பெயருக்கு வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீது ஒன்று அசல் **வா.சா.ஆ.-8** ஆகும். 22-10-2019ம் தேதியிட்ட எனது பெயரில் உள்ள மின்கட்டண ரசீது அசல் ஒன்று **வா.சா.ஆ.-9** ஆகும். 12-11-2019ம் தேதியிட்ட செம்பட்டி கிராம நத்தம் புல எண். 203/22க்கு வழிகாட்டிப் பதிவேட்டின் மதிப்பு இல்லையென்று பதிவுத்துறை வழங்கிய கடிதம் **வா.சா.ஆ.-10** ஆகும். 14-10-2019ம் தேதியில் அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து 2ம்வாதிக்கு அனுப்பப்பட்ட சர்வே நோட்டீஸ் **வா.சா.ஆ.-11** ஆகும். 04-05-2021ம் தேதியிட்ட 2ம் வாதி சின்ன அழகனின் இறப்புச் சான்றிதழ் நகல் **வா.சா.ஆ.-12** ஆகும். எனது பெயரில் உள்ள வீட்டுவரி ரசீதுகள் 5 எண்ணிக்கை அசல் **வா.சா.ஆ.-13** ஆகும். வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ.-1,** வரைபடம் **நீ.ம.சா.ஆ.-2** ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க கு.வி, ஒத்தி வைக்கப்படுகிறது.